# மஞ்சள் முட்டை

பெ.தூரன்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# மஞ்சள் முட்டை

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# மஞ்சள் முட்டை

பெ.தூரன்

**பழனியப்பா பிரதர்ஸ்**

சென்னை – 600014 சேலம் –636001

மதுரை – 625001 திருச்சி –620002

கோயமுத்தூர் – 641001 ஈரோடு–638001

குழந்தைகள் தின வெளியீடு–1977

# MANJAL MUTTAI

Subject : Stories for Children

Author : P. THOORAN

Illustrator : Vijaya

Publishers : PALANIAPPA BROS.

Madras - 14, Tiruchi - 2, Salem - 1

Coimbatore - 1, Madurai – 1, Erode 1.

Printers : ASIAN PRINTERS

14,Peters Road

Madras - 600014

First Edition : 14th November 1977

(Children's Day)

**வணக்கம்**


தித்திக்கும் எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு, இந்நூல்.

சிறுவரின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் வேடிக்கையாக எழுதக்கூடிய ஆற்றல் பெற்ற **திரு.பெ.தூரன்** அவர்களின் இந்நூலை, இந்த ஆண்டுக் குழந்தைகள் தினத்தில் வெளியிடுவதில் பெருமிதமடைகிறோம்.

பெற்றோர்கள், குழந்தைகள் படித்துப் பயனுற் உதவும் இந்நூலை வாங்கி, எங்களுக்கு நல்லாதரவு நல்கிட வேண்டுகிறோம்.

# உள்ளுறை


| வரிசை எண் | கதைகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | மஞ்சள்முட்டை | 1-5 |
| 2 | பலூன் பாப்பா | 6-10 |
| 3 | தண்டி மூக்கன் | 11-14 |
| 4 | ஊமை விலங்கு | 15-17 |
| 5 | யாரடா அவன்? | 18-24 |
| 6 | தாய்மொழி பேசாத நாய்க்குட்டி | 25-30 |
| 7 | படையெடுப்பு | 31-37 |
| 8 | முத்துவின் முதல் திருட்டு | 38-41 |



# 1. மஞ்சள் முட்டை

ஒருகாட்டிலே, மரங்களுக்கு இடையிலே கொஞ்சம் இடைவெளி இருந்தது. அங்கு மரமும் இல்லை, செடியும் இல்லை. புல்கூட முளைக்காமல் வெட்டவெளியாக இருந்தது.

பறவைகள் எல்லாம் அந்த இடத்தைச் சுற்றியுள்ள மரங்களில் கூடு கட்டும். அங்கு அமர்ந்து பலவகையாகக் கூவிக்கொண்டிருக்கும். காலை நேரத்திலே அவை கூவத் தொடங்கினால் மாலையில் இருட்டாகும் வரை அவற்றின் குரல் கேட்டுக்கொண்டே இருக்கும்.

ஒரு நாள் காலையில் அந்தப் பறவைகள் விழித்து எழுந்ததும் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டன.

அந்த வெட்டவெளியிலே பெரிய முட்டை ஒன்று காணப்பட்டது. அத்தனை பெரிய முட்டையை அந்தப் பறவைகள் பார்த்ததே இல்லை. அதுமட்டும் அல்லாமல் அந்த முட்டை ஒரே மஞ்சள் நிறமாக இருந்தது. அதுவும் ஓர் ஆச்சரியம்.

அந்தப் பறவைகள் எல்லாம் ஆந்தையிடத்திலே போய் அதைப்பற்றிச் சொல்லின. ஆந்தைதான் அந்தப் பறவைகளுக்கு அதிபதி. அதற்கு மூளை அதிகம் என்று அந்தப் பறவைகள் அதையே அதிபதியாக ஏற்றுக்கொண்டிருந்தன.

ஆந்தை தன் பட்டுப்போன்ற இறக்கைகளை அடித்துக் கொண்டு, சத்தமில்லாமல் பறந்து வந்து, மஞ்சள் முட்டையைப் பார்த்தது. அதற்கும் ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

உடனே அது குயிலைப் பார்த்துக் கேட்டது, "குயிலே, உனக்குத்தான் கூடு கட்டத் தெரியாது. இது உன்னுடைய முட்டையா?" என்று கேட்டது.

அதற்குக் குயில் கூ, கூவென்று இனிமையாகப் பாடிக்கொண்டே, "இது என்னுதல்ல – என் முட்டை வெள்ளையாக இருக்கும். இது மஞ்சள் முட்டை" என்று சொல்லிற்று.

பிறகு, ஆந்தை காக்கையைப் பார்த்து, "காக்கையே, உன் முட்டையைக் குயில் உன் கூட்டிலிருந்து தந்திரமாக உன்னை ஏமாற்றிவிட்டு எடுத்துவந்து இங்கே போட்டுவிட்டதா? நன்றாகப் பார்" என்று ஆணையிட்டது.

காக்கையும் நன்றாகப் பார்த்துவிட்டுக் கா, கா என்று கத்திக்கொண்டே, “இது என்னுதல்ல – என் முட்டை வெள்ளையாக இருக்கும். இது மஞ்சள் முட்டை – என்னுதல்ல” என்றது.

அந்தச் சமயத்திலே, பக்கத்தில் இருந்த தண்ணீர்க்குட்டையில் நீந்திக்கொண்டிருந்த வாத்து, இந்த முட்டையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அதைப் பார்க்க வந்தது.

அதைக் கண்ட ஆந்தை, “குள்ள வாத்தே, இந்த முட்டை உன்னுடையதா? உனக்குத்தான் அடைகாக்கத் தெரியாதே. நீ இங்கே இந்த முட்டையை இட்டாயா?” என்று கேட்டது.

குள்ளவாத்து, ‘குவாக் குவாக்’ என்று கத்திவிட்டு, “இது என்னுதல்ல – என் முட்டை வெள்ளையாக இருக்கும். இது மஞ்சள் முட்டை என்னுதல்ல” என்று சொல்லித் தலையை ஆட்டிற்று.

ஆந்தை இப்படியே அங்குக் கூடியிருந்த பச்சைக்கிளி, மணிப்புறா, மைனா முதலிய எத்தனையோ பறவைகளைக் கேட்டது.

ஒரு பறவையும் அது தன்னுடையதென்று சொல்லவில்லை.

ஆனால், எல்லாப் பறவைகளும் அந்த மஞ்சள் முட்டையின்மேல் அன்பு கொண்டன. ஒவ்வொன்றும் அடை காப்பதுபோல அதன்மேல் உட்கார முயன்றது. அந்த முட்டை மிகவும் பெரிதாக இருந்ததால் எந்தப் பறவையாலும் அதன்மேல் உட்கார்ந்து அடை காக்க முடியவில்லை.

அதனால் எல்லாப் பறவைகளும் சேர்ந்து, ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கத்தில் உட்கார்ந்து,அந்த முட்டைக்குச் சூடு உண்டாகும்படி செய்து பார்த்தன. பறவை அடை காக்கும்போது எப்படி முட்டைக்குச் சூடு கொடுத்து அதற்குள்ளே குஞ்சு வளர்வதற்கு உதவி செய்கிறதோ அதேபோல, எல்லாப் பறவைகளும் சேர்ந்து சூடு உண்டாக்க முயற்சி செய்தன. அவைகள் இரை தேடக்கூடச் செல்லவில்லை.

அந்த மஞ்சள் முட்டையின் மேலே அவைகளுக்கு அத்தனை அன்பு உண்டாகிவிட்டது. இராப்பகலாக நான்கு நாள்கள் இப்படிப் பல பறவைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு, அந்த முட்டையைச் சூழ்ந்து அமர்ந்திருந்தன .

ஐந்தாம் நாள் காலையிலே பொழுது விடிகின்ற சமயத்தில், அந்தப் பறவைகள் காட்டுகின்ற அன்பைப் பார்த்துவிட்டு, அந்த முட்டையிலிருந்து ஒரு தேவதை வெளிப்பட்டது. முதலில் தேவதை சிறியதாக இருந்தது. பிறகு அது கொஞ்சம் பெரிதாயிற்று. அதைச் சுற்றித் தங்க நிறமான ஒளி வீசிற்று. அப்பொழுது அந்தத் தேவதை இனிமையாகப் பாடிக்கொண்டு நாட்டியம் ஆடிற்று.

“கூட்டு முயற்சியால் நான்வந்தேன்--உங்கள்
கூட்டு முயற்சியால் நான்வந்தேன்”

என்று அந்தத் தேவதை பாடிக்கொண்டே அழகாக ஆடிற்று.

பறவைகளுக்கெல்லாம் ஒரே ஆனந்தம். அவைகள் ஒவ்வொன்றும் ஓங்கிய குரலில் கூடவே பாடத் தொடங்கின.

"கூடி உழைத்தால் கோடி இன்பமாம்_ அன்பாய்க்
கூடி உழைத்தால் கோடி இன்பமாம்"

என்று அவைகள் பாடின. மயில் அதற்கு ஏற்றவாறு ஆடிற்று.

இப்படி வெகுநேரம் அந்தப் பறவைகள் மகிழ்ச்சியோடிருக்கும்படி அந்தத் தேவதை ஆடிவிட்டு மறைந்துவிட்டது. மஞ்சள் முட்டையும் மாயமாக எங்கேயோ போய்விட்டது.

பறவைகள் பிறகு குதூகலத்தோடு, தமது கூட்டு முயற்சியால் கிடைத்த இன்பத்தை அனுபவித்துவிட்டு, இரை தேடச் சென்றன.

இன்னும் ஒரு தடவை அந்த மஞ்சள் முட்டை அங்கே காணப்படுமா என்று அவைகள் தினமும் பார்த்தன. ஆனால், அதன் பிறகு அந்த மஞ்சள் முட்டை காணவே இல்லை.

-------



## 2. பலூன் பாப்பா

**ப**லூன் உங்களுக்குத் தெரியுமல்லவா? அதை வாங்கி ஊதி, கால்பந்து போன்ற உருண்டையான அதன் வடிவத்தைப் பார்ப்பதிலே உங்களுக்கு ஆசைதானே? எத்தனை வகையான பலூன்கள்! அவற்றிலே கலர் எத்தனை எத்தனை!

ஒன்று, சிவப்பாக இருக்கும். இன்னொன்று, மஞ்சளாக இருக்கும். குங்குமம் போலவும், பச்சையாகவும் இப்படி எத்தனையோ நிறத்திலே பலூன் உண்டு.

வடிவங்கள்கூட வெவ்வேறு வகையாக இருக்கும். ஊதினால் ஒன்று புடலங்காய்போல இருக்கும். பாம்புபோல ஒன்று. சுரைக்காயைப்போல ஒன்று. பூசணிக் காயைப்போல ஒன்று.

நான் இப்போதுகதை சொல்லுவது பூசணிக்காயைப் போல இருக்கும் பலூனைப் பற்றித்தான். முதலில் அது சின்னதாக இருக்கும். வாயில் வைத்து ஊதினால் பூசணிக்காயைப்போலப் பெரிதாக வரும்.

நடராஜன் என்று ஒரு பையன் இருந்தான். அவனுக்குப் பூசணிக்காய்ப் பலூன் என்றால் ரொம்பப் பிரியம். அதை வாங்கி மூச்சுப் பிடித்து ஊதுவான். அது கொஞ்சங்கொஞ்சமாகப் பெரிதாகி வரும். முதலில் டென்னிஸ் பந்துபோல் ஆகும். அதற்குமேலே ஊதினால் கால்பந்துபோலப் பெரிதாகும். இப்படி அது உப்பிப்பெரிதாக ஆகிறதைப் பார்த்துப் பார்த்து நடராஜனுக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கும். அதை ஒரு நூலால் காற்றுப் போகாமல் கட்டிவிட்டு மேலே தூக்கி வீசுவான். அது காற்றிலே அங்கும் இங்கும் அவன் கைக்குச் சிக்காமல் ஓடும். நடராஜன் சிரித்துக்கொண்டே அதைப் பிடிப்பான். சில சமயம் காலால் மெதுவாக உதைப்பான். அது உருண்டு ஓடும். இப்படி அவன் விளையாடுவான்.

நடராஜனுக்கு மாமா ஒருவர் இருந்தார். ஒருநாள் அவர் பட்டணத்திற்கு வந்தார். வந்தபோது, “மாமா, மாமா, பூசணிக்காய்ப் பலூன் வேணும்–கடற்கரைக்குப் போய் வாங்கிவரலாம்” என்று அவன் கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டான்.

மாமா அப்படியே பச்சை நிறத்தில் ஒரு பலூன் வாங்கிக்கொடுத்தார். அதோடு அவருக்குச் சித்திரம் போடவும் தெரியும். சின்னப் பாப்பா சிரிப்பதைப் போலவும் சர்க்கஸ் கோமாளி வாயைப்போலவும் அவர் மையால் அந்த பலூனில் போட்டுக் கொடுத்தார்.

நடராஜனுக்கு ஒரே குதூகலம். அவன் அந்தப் பாப்பாவுக்குப் ‘பலூன் பாப்பா’ என்று பேர் வைத்தான்.

பலூன் பாப்பாவைக் கொஞ்சம் ஊதுவான். அதுவாயைத் திறந்து சிரிப்பதுபோலத் தோன்றும். இன்னும் கொஞ்சம் காற்றை உள்ளே ஊதுவான்.

பலூன் பாப்பாவின் சிரிக்கிற வாய் இன்னும் கொஞ்சம் பெரிதாக வாய் பிளந்ததுபோலச் சிரிக்கும். பலூன் பாப்பாவுக்கு வயிறு கொஞ்சம் கொஞ்சமாகத் தொந்தி வர ஆரம்பிக்கும்.

அதைப் பார்த்து நடராஜன், ‘பலூன் பாப்பாவுக்குத் தொந்தி, பலூன் பாப்பாவுக்குத் தொந்தி!–பாருங்கோ! பாருங்கோ!” என்று கூத்தாடினான்.

பலூன் பாப்பாவுக்கு இன்னும் பெரிய தொந்தி வரவேண்டும் என்று நடராஜன் விரும்பினான். உடனே பலூனை வாயில் வைத்து ஊதத் தொடங்கினான்.

அப்பொழுது பலூன் பாப்பா அவனைப் பார்த்து, “ராஜா,இப்பொழுதே எனக்கு வயிறு வலிக்கிறது. காற்றை மேலும் ஊத வேண்டாம்” என்று கெஞ்சிக் கேட்டது.

“அப்படித்தான் ஊதுவேன். ஊதினால் என்னவாம்?” என்று நடராஜன் கேட்டான். பலூன் பாப்பாவின் கெஞ்சுதலுக்குக் கொஞ்சங்கூட மனம் இளகாமல் அவன் அப்படிக் கேட்டான்.

“ராஜா, இன்னும் எனக்குத் தொந்தி பெரிதானால் என் வயிறு வெடித்துப்போகும். அப்படிச் செய்யாதே” என்று மறுபடியும் கெஞ்சியது.

“அதெல்லாம் முடியாது. நான் ஊதத்தான் ஊதுவேன்” என்று சொல்லிக்கொண்டே நடராஜன் ஊதத்தொடங்கினான்.

பாவம், சிரித்துக்கொண்டிருந்த பலூன் பாப்பா வயிறு உப்பி, ‘படார்’ என்று வெடித்துவிட்டது. பிறகு பார்த்தால் பலூன் ஒரேயடியாகச் சுருங்கிப் போயிற்று. பாப்பாவின் சிரித்த முகத்தையும் அதில் காண முடியவில்லை.

நடராஜனுக்கு ஒரே அழுகையாக வந்தது. “மாமா, மாமா இன்னொரு பலூன் வாங்கிக்கொடுங்கள்” என்று தேம்பிக்கொண்டே கத்தினான்.

ஆனால், மாமா புறப்பட்டுத் தம் ஊருக்குப் போய்விட்டார். தாயும் தகப்பனும் அவரை வழி அனுப்புவதற்காகச் சென்றவர்கள் அப்படியே கோயிலுக்கும் போய்விட்டார்கள்.

அதனால் வீட்டில் தனியாக இருந்து நடராஜன் அழுதுகொண்டே இருந்தான். பலூன் பாப்பாவும் அவன் அழுவதைப் பார்த்து வருத்தப்பட்டது.

“ராஜா, அழாதேடா, கண்ணு. மாமா நாளைக்கு வருவார், அழாதே என்று சொல்ல முயன்றது. ஆனால், இப்பொழுது அதன் வயிறும் உடம்பும் கிழிந்து போனதால் அதனால் பேசவே முடியவில்லை. எத்தனை உரக்கக் கத்தினாலும் அதன் குரல் வெளியே கேட்கவில்லை.

நடராஜன் அழுகை ஓய்வே இல்லை. அவனுடைய கண்களில் கண்ணீர் தாரைதாரையாய் வழிந்துகொண்டிருந்தது. கன்னமெல்லாம் சிவந்து போயிற்று.

கோயிலுக்குப் போன பெற்றோர்கள் நல்ல வேளையாக வேறொரு பூசணிக்காய்ப் பலூன் வாங்கி வந்தார் அதைக் கண்டபிறகுதான் நடராஜன் அழுகை நின்றது.

“அப்பா, இதிலே சிரிக்கிற மாதிரி ஒரு பாப்பா போட்டுக் கொடுங்கள்” என்று அவன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

“எனக்கு உன் மாமாவைப் போலப் படம் வரையத் தெரியாது. நாளைக்கு மாமா மறுபடியும் வருவார். அவரிடம் படம்போடச் சொல்” என்று அவர் கூறி விட்டார்.

நடராஜன் இப்பொழுது மிகவும் கவனமாக இருந்தான். பலூனை அதிகமாக ஊதவில்லை. ‘மாமா வரட்டும், பலூன் பாப்பாவை அதில் போடச் சொல்கிறேன்’ என்று எண்ணிக்கொண்டு, அவன் மகிழ்ச்சியோடு மாமா வருகிற வழியையே காலைமுதல் பார்த்துக்கொண்டிருந்தான். சாப்பிடக்கூட அவனுக்குத் தோன்றவில்லை.

மாமாவும் மாலையில் வந்தார். பலூன் பாப்பாவை அழகாக வரைந்து கொடுத்தார். நடராஜன் கால்பந்து அளவுக்குப் பலூனை ஊதினான் பலூன் பாப்பா சிரித்தது. அப்பொழுது நடராஜன்

“பலூன் பாப்பா பலூன் பாப்பா
கோபங்கொள்ளாதே,
பந்தைக் காட்டிலும் பெரிதாய் ஊதேன்.
வெடித்துப் போகாதே”

என்று பாடிக்கொண்டே ஆடினான். அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



# 3. தண்டி மூக்கன்

**ம**ணி என்று ஒரு பையன் இருந்தான். அவன் சிறு வயதிலிருந்தே எப்பொழுது பார்த்தாலும் மூக்கை விரலால் நோண்டிக்கொண்டே இருப்பான். "அப்படிச் செய்யாதே மூக்கில் புண் உண்டாகிவிடும்! அதோடு மூக்கும் பெரிதாகிவிடும்" என்று அவன் தாயார் பல தடவை சொல்லிப் பார்த்தாள். ஆனால், அவன் அந்தப்பழக்கத்தை விடவே இல்லை.

அதனால் அவனுடைய மூக்கு கத்தரிக்காயைப்போலத் தண்டியாக ஆகிவிட்டது. அதைக் கண்ட மற்ற சிறுவர்கள் அவனைத் தண்டி மூக்கன் என்று கூப்பிட ஆரம்பித்தார்கள். பிறகு அந்தப் பெயரே நிலைத்துவிட்டது. மணி என்ற பெயர் மறைந்துபோயிற்று.

தண்டி மூக்கன் செய்வதெல்லாம் வேடிக்கையாக இருக்கும். அவனுடைய அம்மா, "பசுவுக்கு அகத்திக்கீரை போடு" என்று ஒரு நாள் அவனிடம் சொன்னாள்.

உடனே அவன் அகத்திக்கீரையைப் பறித்து வந்து, ஒரு சட்டியில் போட்டு, அடுப்பில் வைத்தான்.

"அடுப்பில் என்ன செய்கிறாய்?" என்று அம்மா கேட்டாள்.

"அம்மா, அகத்திக்கீரையை வேகவைத்துத்தானே நாம் தின்கிறோம். அதனால் பசுவுக்கும் கீரையைக் கடைந்து போட அடுப்பில் வைத்திருக்கிறேன்" என்று தண்டி மூக்கன் பதில் சொன்னான்.

அதைக் கேட்டு அவன் தாயார் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

ஒரு நாள் தண்டி மூக்கன் பெரிய நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துவிட்டு 'ஹோ'வென்று அழத்தொடங்கிவிட்டான். தாயார் வந்து, ஏன் அழுகிறாய் என்று கேட்கவே, அம்மா, இங்கே என் முன்னால் பார். என்னைப் போலவே ஒருவன் இருக்கிறான். அவன் வந்து உன்னிடம் மிட்டாய் கேட்டால், நீ அவனை நான்தான் என்று நினைத்துக்கொண்டு கொடுத்துவிடுவாய். பிறகு எனக்கு இல்லாமல் போய்விடும்" என்று சொல்லி விட்டுத் தேம்பித்தேம்பி அழுதான். அவனுக்கு ஆறுதல் கூறுவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது.

வீட்டிலே பரண்மேலே ஒரு பெரிய அரிசி மூட்டை வைத்திருந்தார்கள். அவன் அதைப் பார்த்துவிட்டு மற்றொரு நாள் அழத்தொடங்கினான். ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது, நான் அந்தப் பக்கமாகப் போகும்போது அது என்மேல் விழுந்து என்னைக் கொன்றுவிடுமே" என்று கதறினான். அந்த மூட்டையைக் கீழே எடுத்து வைக்கும்வரை அவன் அழுகையை நிறுத்தவில்லை.

இப்படி, அவன் ஒன்றும் அறியாதவனாக இருக்கிறானே என்று எண்ணி எண்ணி அவன் தாய் வருந்தினாள்.

அந்த வருத்தத்தாலேயே மனம் நொந்து இறந்துவிட்டாள். இறப்பதற்கு முன்னால், "மகனே, உனக்குத் தகப்பனும் இல்லை, நானும் உன்னை விட்டுப் பிரியப் போகிறேன். ஆகையால், நீ யாரையாவது அடைந்து உன் அறிவைப் பெருக்கிக்கொள். அப்பொழுதுதான் நீ வாழ்க்கையிலே முன்னேற முடியும்," என்று சொல்லிவிட்டு இறந்தாள்.

தாய் இறந்ததும் அவனுக்குத் திடீரென்று மனத்திலே இடி விழுந்ததுபோலத் தோன்றியது. அவன் புரண்டு புரண்டு அழுதான். பிறகு அறிவு தேடவேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டான்.

தண்டிமூக்கு தனக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்து அவன், "வேலைவேணும், தண்டிமூக்கு வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே அலைந்தான். ஓர் ஊருக்குப் போனபோது அங்கிருந்த பெரியவர் ஒருவர் அவனைப் பார்த்து இரக்கங்கொண்டு, அவனிடம் பல கேள்விகள் கேட்டார்.

தண்டி மூக்கன் அவனுடைய வாழ்க்கையை அவரிடம் சொல்லிவிட்டு அழுதான். அவனுக்குப் பசி பொறுக்க முடியவில்லை. அதை அறிந்த அந்தப் பெரியவர் அவனுக்கு உணவு தந்தார். பசி தணிந்தவுடனே அவனுக்குப் புதிய உற்சாகம் வந்து விட்டது.

"தண்டிமூக்கு வேண்டாம் சாப்பாடு வேண்டுமே
மூக்கு வேண்டாம் மூளை வேண்டுமே"
என்று பாடிக்கொண்டே ஆடத்தொடங்கினான்.

அவனுக்கு நல்ல வேடிக்கை செய்யும் திறமை இருப்பதை உணர்ந்து, அவனை ஒரு சர்க்கஸில் கோமாளியாகச் சேர்த்துவிட்டார் அந்தப் பெரியவர். கொஞ்ச நாளில் அவன் பெரிய பபூன் [கோமாளி] ஆகிவிட்டான். அவன் தன் தண்டிமூக்கின்மேலே களிமண் உருண்டையை வைத்து, அதற்கு வர்ணம் பூசிக்கொண்டு வருவதைப் பார்த்தாலே எல்லோரும் கைதட்டுவார்கள்; சிரிப்பார்கள். மேலும் அவன் நல்ல வேடிக்கைகள் செய்வான். அதனால் அவனை எல்லோரும் புகழ்ந்தார்கள். சர்க்கஸ் கம்பெனிக்கு அவனால் நிறைய வரும்படி கிடைத்தது.

அவனுடைய தண்டிமூக்கே இப்பொழுது அவனுக்குப் புகழ் வரும்படி செய்வதை உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தான். அவன் ஒன்றுந்தெரியாத பழைய தண்டிமூக்கன் இல்லை. இப்பொழுது அவன் வேடிக்கை செய்வதில் புதிய புதிய முறைகளை நாள்தோறும் கற்பனை செய்வான். அதற்கு அவனுடைய தண்டிமூக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.



# 4. ஊமை விலங்கு

**வி**லங்குக் காட்சிசாலைக்குப் போயிருக்கிறீர்களா?

அங்கே கழுத்து நீண்ட மிக உயரமான விலங்கு எது என்று கேட்டால் உடனே சொல்லிவிடுவீர்கள்.

அதுதான் ஒட்டகச்சிவிங்கி. அது 20 அடி உயரம் இருக்கும்.

விலங்குக் காட்சிசாலையில் புலி உறுமுகிறது; சிங்கம் கர்ஜிக்கிறது. குரங்குகள் கீச்கீச்சென்று சத்தம் செய்கின்றன. கிளி அழகாகப் பேசுகிறது.

ஒட்டகச்சிவிங்கி இப்படிச் சத்தம் போடுகிறதா என்று கவனித்தீர்களா?

எவ்வளவு நீளக் கழுத்து அதற்கு இருக்கிறது. நாக்கு 18அங்குலம், அதாவது சரியாக ஒரு முழம் இருக்கும்.

இருந்தாலும் அது சத்தம் போடுகிறதா? அதற்கு. நீண்ட கழுத்திருக்கிறது–நாக்கு ஒருமுழம் என்றால் ஆச்சரியமாக இல்லையா? சும்மா அரட்டை அடிக்கிறவனைப் பார்த்து, 'ஏண்டா, உனக்கு நாக்கு நீண்டு போச்சா?' என்கிறோமல்லவா?

அப்படியானால் ஒட்டகச்சிவிங்கி பெரிய சத்தம்போடும் என்று நினைக்கத் தோன்றும். அதுதான் இல்லை. அது சத்தம் போடுவதுமில்லை; குரல் கொடுப்பதே இல்லை. அது ஒரே ஊமை. ஊமைகூட ஏதாவது சத்தம் போடுவான். பாவம், அந்த விலங்குக்கு அது கூடச் செய்ய முடியாது.

இதைப்பற்றி ஒரு கற்பனைக் கதையை இப்போது கேட்கலாம்.

முன்காலத்திலே, அதாவது, ரொம்ப ரொம்ப முன்னாலே, ஒட்டகச்சிவிங்கி பேசிக்கொண்டுதான் இருந்ததாம். அதாவது பெரிய சத்தம் போடுமாம்.

ஒரு தடவை ஒட்டகச்சிவிங்கிக்குச் சளிப்பிடித்துத் தொண்டை கட்டிக்கொண்டது. ஆகையால் அதனால் பேசவே முடியவில்லை.

பாவம், அந்தச் சாதுவான விலங்கின்மேல் மற்ற. எல்லா மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இரக்கம் உண்டாகிவிட்டது.

தொண்டையென்றால் அதற்குத்தான் கழுத்து வெகுநீளமாக இருக்கிறதல்லவா? அதனால் தொண்டையெல்லாம் புண் உண்டாகி, பாவம். அது மிகவும் துன்பப்பட்டது; அந்தத் துன்பத்தைப் போக்கப் பறவைகளும் விலங்குகளும் பெரிய முயற்சி செய்தன.

தேன்சிட்டுத் தேன் எடுத்து வந்தது. குரங்கு எங்கிருந்தோ மிளகுச்செடியிலிருந்து பச்சை மிளகு கொண்டுவந்தது. யானை இரண்டையும் குழைத்து உள்ளுக்குக் கொடுத்தது.

தூக்கணங்குருவிகள் தங்கள் கூடுகளையெல்லாம். மரக்கிளைகளிலிருந்து எடுத்து வந்தன. தையற்சிட்டுகள் தூக்கணங்குருவிக் கூடுகளையெல்லாம் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தைச் சுற்றிலும்

மப்ளர்போலச் சுற்றிவைத்துக் குளிர்காற்றுப்படாதவாறு செய்தன.

கரடிக்குட்டிகளும் குரங்குக்குட்டிகளும் ஒட்டகச்சிவிங்கியின் மேல் ஏறிக்கழுத்தைச் சுற்றி வெதுவெதுப்பாக இருக்கும்படி கெட்டியாகத் தழுவிப் பிடித்துக் கொண்டன.

“பாவம், நல்ல ஒட்டகச்சிவிங்கி. அதன் கண்களைப் பாருங்கள், எத்தனை அழகு” என்று அவையெல்லாம் பேசிக்கொண்டன.

சில நாள்களில் ஒட்டகச்சிவிங்கிக்குத் தொண்டைப்புண் ஆறிவிட்டது. ஆனால், கம்மிப்போன தொண்டை அப்படியே அடைத்துப்போய்விட்டது. மறுபடியும் அதனால் பேசவே முடியவில்லை. அந்தக் காலம் முதற்கொண்டு ஒட்டகச்சிவிங்கிகள் எல்லாவற்றிற்கும் பேசும் சக்தியே இல்லாமல் போய்விட்டதாம். விலங்குகளும் பறவைகளும் அதை அறிந்து மிகவும் விசனப்பட்டன. இருந்தாலும், அவற்றால் ஒட்டகச்சிவிங்கியைப் பேச வைக்கவே முடியவில்லை. அதனால் ஒட்டகச்சிவிங்கிக்கு ஊமை விலங்கு என்று பெயர் ஏற்பட்டது.



## 5. யாரடா அவன்?

“கண்ணம்மா, இந்தக் கோடை விடுமுறைக்கு அசோக் இங்கு வருவான்; கடிதம் எழுதியிருக்கிறான்” என்று உற்சாகத்தோடு கூவினான் கந்தசாமி. கடிதத்தை இன்னும் அவன் படித்து முடிக்கவில்லை.

“அப்படியா, அண்ணா? எங்கே, கடிதத்தை என்னிடம் கொடு. நான் படிக்கிறேன். அசோக் வந்தால் ரொம்ப நன்றாக இருக்கும்” என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டே, கண்ணம்மா கடிதத்தைப் பிடுங்கிப் படிக்கலானாள்.

கந்தசாமியும் கண்ணம்மாளும் தங்கள் பெற்றோரோடு கிராமத்திலே வசித்து வந்தார்கள்.

அந்தக்கிராமத்திலே புதிதாக ஓர் உயர்நிலைப்பள்ளி ஏற்பட்டிருந்தது. அதிலே கந்தசாமி ஒன்பதாம் வகுப்பிலும் அவன் தங்கை கண்ணம்மா ஏழாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அசோக் இவர்களுடைய அத்தைமகன். அவன் சென்னை மாநகரிலே தன் தாய்தந்தையருடன் இருந்துகொண்டு எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் கோடை விடுமுறைக்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு தங்கள் வீட்டிற்கு வருவதை அறிந்து, கந்தசாமிக்கும் கண்ணம்மாளுக்கும் ஒரே குதூகலம். கிராமத்துப் பண்ணை வேலையெல்லாம் அசோக்குக்குப் புதுமையாக இருக்கும். ஏர் உழுதல், நாற்று நடுதல், பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் இவற்றையெல்லாம் அசோக் சென்னையிலே பார்த்திருக்க முடியாது. தங்கள் பண்ணைக்கு அழைத்துச் சென்று இவற்றையெல்லாம் அவனுக்குக் காட்டவேண்டுமென்று இருவரும் ஆவலுடன் இருந்தார்கள்.

ஆனால், அசோக் கிராமத்தில் வாழும் மக்களைப்பற்றியெல்லாம் தாழ்வாகவே மதிக்கிறவன். கிராம மக்கள் பலவகையான மூடநம்பிக்கைகள் உடையவர்கள் என்பதும், விஞ்ஞான அறிவு இல்லாதவர்கள் என்பதும் அவன் கருத்து.

அதனால், அவன் அங்கு வந்து சேர்ந்தது முதற்கொண்டு, கிராமத்தில் தான் காணும் ஒவ்வொன்றைப் பற்றியும் பழித்துப் பேசியே வந்தான். புதிதாக அவன் பார்த்ததைக்கூட அவன் மதிக்கவில்லை. “மின்சார விசிறி உண்டா? நல்ல மருத்துவர்கள் உண்டா?” இப்படி ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தான்.

கந்தசாமிக்கும் கண்ணம்மாவுக்கும் அவனுடைய மனப்பான்மை பிடிக்கவில்லை. காணாதவற்றைக் காண்பித்தாலும் அசோக் அவற்றைப் பற்றி மகிழ்ச்சி தெரிவிக்கவே இல்லை. அத்துடன் அவன், "கிராமத்தில் இருப்பவர்கள் பேய் என்பார்கள்; பிசாசு என்று கூறிப்பயப்படுவார்கள். விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இந்தக் காலத்திலும் இந்தக் குருட்டு நம்பிக்கைகள் போகவில்லை" என்று இடித்துக் கூறிக்கொண்டே இருந்தான்.

அவன் இப்படிக் குறை சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கேட்டு இருவருக்கும் அலுத்துப்போய்விட்டது அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும் என்று தங்களுக்குள்ளே தீர்மானம் செய்துகொண்டார்கள்.

சில நாள்களுக்குப் பிறகு அவர்களுக்கு ஒரு நல்ல சமயமும் கிடைத்தது. அவர்களுடைய பெற்றோர்கள் ஏதோ ஒரு திருமணத்திற்காக மற்றோர் ஊருக்குப்போக வேண்டியிருந்தது. மாலையிலே போய் அடுத்த நாள் காலையில்தான் திரும்புவார்கள். வீட்டில் கந்தசாமி, கண்ணம்மா, அசோக் மூவருமே இருப்பார்கள். பண்ணையில் வேலை செய்பவர் ஒருவர் வீட்டுத் திண்ணையிலே இரவிலே படுத்துக்கொள்ளுவார். வீட்டிற்குள்ளே நடப்பது அவருக்கு ஒன்றும் தெரியாது. அந்த இரவு தான் நல்ல சமயம் என்று கந்தசாமி திட்டமிட்டான்.

தாய்தந்தையர் திருமணத்திற்கு வண்டியிலே சென்ற பிறகு, "அசோக், உனக்குப் பேய் என்றால் பயமே இல்லையா?" என்று கேட்டான் கந்தசாமி.

“பேய் இருந்தால்தானே பயப்படுவதற்கு? இதெல்லாம் கிராமத்து மக்களின் மூடநம்பிக்கை” என்று அசோக் குத்தலாகப் பேசினான்.

“எங்கள் வீட்டிற்குள் கிழக்குப் பார்த்ததுபோல் ஓர் அறை இருக்கிறது பார்த்தாயா?”

“ஆமாம், எப்பொழுதும் அதை ஏன் பூட்டியே வைத்திருக்கிறீர்கள்? அதில் ஏதாவது தானியம் கிடக்கிறதா?” – இது அசோக் கேட்ட கேள்வி.

“அந்த அறையிலே ஒரு பேய் வாசம் செய்கிறது. அதனால் நாங்கள் அந்த அறைக்குள் போவதேயில்லை” என்றான் கந்தசாமி.

அசோக் இதைக் கேட்டு, இகழ்ச்சியாக உரக்கச் சிரித்தான்.

“என்ன, சும்மா சிரிக்கிறாயே! இன்றிரவு அந்த அறைக்குள் நீ தனியாகப் படுத்துத் தூங்குவாயா?” என்று கேட்டான் கந்தசாமி.

“ஓ, நன்றாகத் தூங்குவேன். எனக்குப் பயமே இல்லை” என்று அசோக் மடமடவென்று பதிலளித்தான்.

அந்த அறைக்குள்ளே அசோக் அன்றிரவு தனியாகப்படுத்து உறங்குவது என்று ஏற்பாடாயிற்று.

“அண்ணா, இதென்ன வேடிக்கை? அந்த அறையிலே பேய் இல்லையென்று நமக்குத்தான் தெரியுமே! என்று கண்ணம்மா கந்தசாமியிடம் தனியாகக் கேட்டாள்.

“ஒரு வேடிக்கை செய்யப்போகிறேன். நீ பேசாமல் பார்த்துக்கொண்டிரு” என்றான் அண்ணன்.

“என்ன வேடிக்கை அது ? எனக்கும் கொஞ்சம் சொல்லேன்.”

“என் வகுப்பிலே ராமன் என்ற ஒரு பையன் படிக்கிறான், உனக்குத் தெரியுமா? என்னோடு அடிக்கடி பார்த்திருப்பாயே!’

“யார், தெனாலிராமனா?”

“ஆமாம், அவனேதான்; அவன் எத்தனையோ வேடிக்கைகள் செய்வான்; அதனால் அவனைத் தெனாலிராமன் என்று நாங்கள் எல்லாம் கூப்பிடுவோம். அவன் ஒரு கிளியை வளர்த்து வருகிறான். சீழ்க்கை அடித்தால் அது, ‘யாரடா அவன்? எங்கடா வந்தாய்? பிடிடா அவனை’ என்று ஒருவிதமான கீச்சுக் குரலில் கத்தும். அந்தக் கிளியைக் கூண்டோடு வாங்கி வந்திருக்கிறேன்” என்றான் கந்தசாமி. அவன் கண்களில் ஒளி வீசிற்று.

“ஆமாம், அதை வைத்துக்கொண்டு என்ன செய்வாய்?” என்று ஒன்றும் விளங்காமல் கேட்டாள் கண்ணம்மா.

“அந்தக் கிளிக்கூண்டை கிழக்குப் பார்த்த அறையிலே, பரண்மேலே வைத்துவிடப் போகிறேன். இரவிலே நான் சீழ்க்கை அடிக்கும்போது என்ன நடக்கிறது என்பதை நீயே பார்த்துக்கொள்.”

“அண்ணா, அசோக் ரொம்ப பயந்துவிடப் போகிறான். அவனுக்கு ஏதாவது உடம்புக்கு ஆகாமற்போனால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நாம் செய்யும் வேடிக்கை தெரிந்துபோகும்.

பிறகு, நம்மேல் அவர்கள் கோபிப்பார்கள்" என்று கண்ணம்மா கவலையோடு எச்சரிக்கை செய்தாள்.

"அதெல்லாம் ஒன்றும் வராது. நாம்தாம் பக்கத்து அறையிலேயே இருக்கப் போகிறோமே!" என்று கந்தசாமி சொல்லிக் கண்ணம்மாவைச் சமாதானப் படுத்திவிட்டான்.

இரவு அசோக் அந்த அறையில் தனியாகப் படுத்துக்கொண்டான். அறையில் விளக்குக்கூட இல்லை. எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. வெளியிலே ஒரு சிறு ஒலி கூடக் கேட்கவில்லை. இவையே அசோக்கின் நெஞ்சைக் கலக்கிற்று. ஆர்ப்பாட்டமாகப் பேசினாலும் அசோக் உண்மையிலேயே ஒரு கோழைதான். அதனால் அவனுக்கு இரவு '12 மணி' ஆகியும் தூக்கமே வரவில்லை. அந்தச் சமயத்திலே சீழ்க்கை ஒலி மெதுவாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து கிளியின் குரல் ஏதோ பேய் பேசுவதைப் போலக் கிளம்பிற்று.

"யாரடா.... அவன்?.... எங்கடா....... வந்தாய்....? பிடிடா அவனை ...."

கிளியின் பேச்சைக் கேட்டு அசோக் நடுங்கிப் போய் விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் அறையை விட்டு அவன் வெளியே ஓடினான். பசுவிற்குப் போடுவதற்காக வைக்கோல் ஒரு பக்கத்திலே குவித்து வைக்கப்பட்டிருந்ததை அவன் முன்னமேயே பல முறை பார்த்திருக்கிறான். அங்கே போய் வைக்கோலைத் தன்மேலே போட்டு மூடிக்கொண்டு குறுகுறுவென்று பதுங்கிக்கொண்டான் அசோக்.

கந்தசாமியும் கண்ணம்மாவும் பின்னாலேயே ஓடிவந்து, வைக்கோலை அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். அதனால் சரசர வென்று சத்தம் உண்டாகவே, “ஐயோ, பேய்! பேய்!” என்று அலறினான் அசோக்.


அண்ணனும் தங்கையும் உரக்கச் சிரித்தார்கள். அப்பொழுதுகூட அவனுடைய பயம் தீரவில்லை.

அவன் உடம்பெல்லாம் வியர்வை பொங்கி வழிந்தது. அசோக் இப்பொழுது நல்ல பாடம் கற்றுக்கொண்டான்.

“மூடநம்பிக்கை என்பது எங்குமே இருக்கலாம். கிராமத்தில்தான் அது இருக்கிறது என்று எங்களை இனிமேல் இழிவாக நினைக்கவேண்டாம். நீ கண்டது கிளிப்பேய். ஆனால், உண்மையிலே அது கிளிப் பேய்தான். கிளிப் பேயல்ல’ என்று கந்தசாமி சொன்னான். “ஆமாம் அசோக், கிளிப் பேயல்ல, பேய் என்று நினைத்து அதனால் உண்டாகும் கிலிதான், அதாவது பயந்தான் பேய்” என்று விளக்கம் தந்தாள் கண்ணம்மா.

அடுத்த நாள் முதற்கொண்டு அசோக் முற்றிலும் மாறிவிட்டான். பட்டணத்து நாகரிகத்தைப் பற்றி உள்ளுக்குள்ளே அவன் உயர்வாக எண்ணியிருந்தான். ஆனால், அது இப்பொழுது மறைந்துவிட்டது. அதனால் அசோக் எவ்வளவு நல்லவன் என்பதைக் கந்தசாமியும் கண்ணம்மாவும் தெரிந்துகொண்டனர். சில நாள் கழித்து அசோக் விடைபெற்றுப் பட்டணம் திரும்பும்போது மூன்று பேர்களுடைய கண்களுமே கலங்கிவிட்டன. “அசோக், அடுத்த விடுமுறையிலும் நீ இங்கு வர வேண்டும்” என்று கூறினாள் கண்ணம்மா.

“கட்டாயம் வருகிறேன்” என்று கூறிச் சென்றான். அசோக்.




# 6. தாய்மொழி பேசாத நாய்க் குட்டி

**அ**ழகான நாய்க்குட்டி ஒன்று இருந்தது. அதன் உடம்பெல்லாம் ஒரே வெள்ளை நிறம். காதில் மட்டும், கறுப்பு நிறம். அது வாலைக் குழைத்துக்கொண்டு ஓடுவதைப் பார்க்கும்போது அதன் தாய்க்கு மிகவும் பெருமையாக இருந்தது.

அந்த நாய்க்குட்டிக்கு அன்போடு பால் கொடுத்து, அதன் தாய் செல்லமாக வளர்த்துவந்தது. அந்தக் குட்டியைத் தன்னைப் போலவே உறுமவும், குரைக்கவும் கற்றுக் கொடுத்தால் யாரும் அதை விரும்புவார்கள் என்பது தாயின் எண்ணம்.

யாராவது புதிதாக வெளி வாயில்பக்கம் வரும்போதே தாய் ‘உர்’ என்று உறுமிக்கொண்டு வாயிலை நோக்கிச் செல்லும். குட்டியும் அதனோடு ஓடும்.

அதுவும் தன்னைப் போலவே ‘உர்’ என்று உறும வேண்டும் என்பது தாயின் ஆசை. ஆனால், அந்தக் குட்டி அப்படி உறும விரும்பவில்லை.

பிறகு யாராவது உள்ளே நுழைந்தால் தாய் “உப்வ் உவ்வ்” என்று சத்தமிடும். அந்த சத்தத்தைக் கேட்ட பிறகும் பயப்படாமல் உள்ளே அடியெடுத்து வைத்தால் பயங்கரமாக அது குரைக்கும்.

குட்டி இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே மௌனமாக இருக்கும்.

“என்னைப் போல நீ குரைக்க எப்பொழுதுதான் கற்றுக்கொள்ளப் போகிறாய்?” என்று தாய் சற்று விசனத்தோடு கேட்கும்.

“போம்மா; நீ சுத்தக் கர்நாடகம். உன்னைப்போல நான் சத்தம் போட மாட்டேன். நான் புதிய விதமாகப் பேசப்போகிறேன்” என்று அந்த நாய்க்குட்டி பதில் சொல்லிற்று.

“கர்நாடகம் என்றால் என்ன? எனக்குத் தெரியவில்லையே!” என்று தாய் கேட்டது.

“நீ பழைய மாதிரியே பேசுகிறாய். நான் புதிய அப்பொழுதுதான் விதமாகப் பேசப்போகிறேன். என்னை எல்லாரும் மதிப்பார்கள்” என்று நாய்க்குட்டி சொல்லிற்று.

இதைக் கேட்டு, தாய் விசனப்பட்டது. இருந்தாலும், அதை அதட்டவோ ஒதுக்கித்தள்ளவோ அதற்கு மனம் வரவில்லை. தானாகவே தன் குட்டி தெரிந்துகொள்ளட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டது.

இந்த நாய்க்குட்டிக்கு ஓர் எருமைக் கன்றும் வாத்துக் குஞ்சும் சிநேகம். அவற்றோடு அது குளக்கரையிலே அடிக்கடி விளையாடும்.

அதற்கு, எருமைக் கன்று கத்துவது நன்றாக இருக்கிறதென்று தோன்றியது. அதனால் எருமைக் கன்றைப் போலவே கத்தப் பழகிக்கொண்டது.

பிறகு, ஒரு பெரிய மாளிகைக்குள் நுழைந்து,வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. குட்டி அழகாக இருப்பதால் அதற்கு நல்ல உணவு கொடுத்து, வீட்டுக்காரன் மாளிகை. யின் முன்னாலேயே அதைக் கட்டிவைத்தான்.

அடுத்த நாள் காலையில் யாரோ ஒரு நண்பர் அந்த வீட்டுக்கு வந்தார். அவரைக் கண்டதும் அந்த நாய்க்குட்டி எருமைக் கன்றைப் போலச் சத்தம் செய்தது.

அவர் வீட்டுக்காரரைப் பார்த்து, “தூ, இந்த நாய்க்குட்டியை உடனே அடித்துத் துரத்துங்கள். வீட்டுக்கு முன்னால் எருமை போலக் கத்துவது ஆகவே ஆகாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நாய்க்குட்டிக்கு நல்ல அடி கிடைத்தது. அது அங்கிருந்து 'தப்பினோம் பிழைத்தோம்' என்று குளக்கரைக்கு வேகமாக வந்து சேர்ந்தது..

அந்தச் சமயத்தில் வாத்துக்குஞ்சு "குவாக் குவாக்" என்று கத்திக்கொண்டு அதனிடம் வந்தது. இந்தப் பேச்சுத்தான் எல்லோருக்கும் பிடிக்கும் என்று நாய்க்குட்டி அதைக் கற்றுக்கொண்டது.

உடனே மிகுந்த உற்சாகத்தோடு மற்றொரு பெரிய வீட்டில் நுழைந்து வாலைக் குழைத்துக்கொண்டு நின்றது.

அந்த வீட்டிலிருந்து ஒரு சிறுவன் வெளியே வந்தான். அவன் நாய்க்குட்டியின் அழகில் மயங்கிப்போய்,

"அப்பா, இதை நம் வீட்டில் வைத்து வளர்க்கலாம்" என்று அப்பாவிடம் ஆசையோடு கேட்டான். அவரும் சம்மதித்தார்.

சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் அதற்குப் பிஸ்கோத்தும் மிட்டாயும் கொடுத்தான். அவற்றைத் தின்றுவிட்டு நாய்க்குட்டி 'குவாக் குவாக்' என்று மகிழ்ச்சியால் சத்தமிட்டது. சிறுவன் அந்தச் சத்தத்தைக் கேட்டு மேலும் குதூகலமடைந்தான். "இந்த நாய்க்குட்டி புதிய பாஷை பேசுகிறது" என்று துள்ளிக் குதித்தான்.

தெருவழியே போய்க்கொண்டிருந்த திருடன் ஒருவன் இவற்றையெல்லாம் நன்றாகக் கவனித்துக் கொண்டான். அவனுக்கு உள்ளுக்குள்ளே ஒரே சிரிப்பு.

இரவில் எல்லாரும் படுத்துத் தூங்கும்போது திருடன் மெதுவாக வீட்டிற்குள் நுழைந்தான். நாய்க்குட்டி “குவாக் குவாக்” என்று சத்தமிட்டது.

அந்தச் சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட வீட்டுக்காரர், ‘நம் வீட்டில் வாத்து இல்லையே! பிறகு எங்கிருந்து இந்தச் சத்தம் வருகிறது? ஒருவேளை, பக்கத்து வீட்டுக்காரர் மாலை நேரத்தில் வாத்து வாங்கியிருக்கலாம்” என்று எண்ணிக்கொண்டு மறுபடியும் கண்ணை மூடித் தூங்கிவிட்டார். புதிதாக வந்த நாய்க்குட்டி இப்படிச் சத்தம் செய்யும் என்று அவருக்குத் தெரியாது.

அடுத்த நாள் காலையில் அனைவரும் எழுந்தபிறகுதான் அந்த வீட்டில் திருட்டுப் போயிருப்பது தெரியவந்தது.

எல்லாரும் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள். போலீஸ் நிலையத்திலிருந்து இரண்டு பேர் உடனே அங்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் நாய்க்குட்டி “குவாக் குவாக்” என்று சத்தம் செய்தது.

உடனே வீட்டின் சொந்தக்காரருக்கு எல்லாம் விளங்கிவிட்டது. ‘நாயைப் போலக் குரைக்காமல் இந்தக்குட்டி புது விதமாகக் கத்தியதால்தான் ஏமாந்துவிட்டேன்’ என்பதை உணர்ந்தார். நாய்க்குட்டியின் மேல் கோபங்கொண்டு, நன்றாக அதை அடித்து வெளியே விரட்டிவிட்டார்.

நாய்க்குட்டி வலி தாங்காமல் ‘குவாக் குவாக்’ என்று கத்திக்கொண்டே தெருவழியாக ஓடிற்று. அது செய்யும் சத்தத்தைக் கேட்டுத் தெருவில் நடந்துகொண்டிருந்தவர்கள், அந்தக் குட்டிக்குப் பைத்தியம் பிடித்து விட்டதனால்தான் அப்படிச் சத்தம் செய்கிறது என்று நினைத்து, அதன்மேல் கல்லைவிட்டு எறிந்தார்கள்.

பாவம், அடிபட்டு மிகவும் வருந்திய நாய்க்குட்டி, தன் தாயிடமே வந்து அழுதது. “எனக்குப் புதுப் பேச்சு வேண்டாம். உன்னுடைய பேச்சையே கற்றுக்கொடு” என்று கெஞ்சிக் கேட்டது.

தாயும் மகிழ்ச்சியடைந்து சொல்லிக் கொடுத்தது. அதுமுதல் அந்த நாய்க்குட்டியை எல்லாரும் விரும்பினார்கள். அதைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டாதவர்களே இல்லை என்று கூறலாம்.



# 7. படையெடுப்பு

**சு**ப்பு என்று ஒரு சின்னப் பையன் இருந்தான். அவன் தம்பியின் பெயர் மணி. சுப்புவுக்கு முதலில் சளிக்காய்ச்சல் வந்தது. அவனோடு சேர்ந்து விளையாடும் மணிக்கும் அது ஒட்டிக்கொண்டது.

இந்தச் சளிக்காய்ச்சல் அவர்களோடு விளையாட வரும் மற்ற குழந்தைகளுக்கும் வரக்கூடாது என்று நினைத்து பெற்றோர்கள்,அவர்களை மேல்மாடியில், ஒரு தனி அறையில் படுக்கவைத்தார்கள். மற்றவர்களுடன் சேராமல் தனியாக இருக்கவேண்டுமே என்று முதலில் அவர்களுக்கு அழுகையாக வந்தது. ஆனால், விளையாடுவதற்காகப் பொம்மை டெலிபோன் ஆளுக்கொன்று வாங்கிக் கொடுக்கவே, அந்த அழுகை நின்றுவிட்டது.

அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. அந்தப் பொம்மை டெலிபோன்கள் பிளாஸ்டிக்கால் ஆனவை. இரண்டுபேரும் தனித்தனியாகப் பக்கத்தில் போடப்பட்டிருந்த இரண்டு கட்டிலில் படுத்துக்கொண்டே டெலிபோனில் பேசுவார்கள். ஒருவன் பேசுவது மற்றவனுக்கு நேராகவே நன்றாகக் கேட்டது. இருந்தாலும், டெலிபோனில் பேசுவதாக அவர்கள் கற்பனை செய்துகொண்டு சிரித்து மகிழ்ந்தார்கள்.

அதனால் அவர்களுக்கு வெளியில் போய் விளையாட வேண்டும் என்ற ஏக்கம் உண்டாகவில்லை. இப்படி இனிமையாக ஒன்றிரண்டு நாள் கழிந்தன. காய்ச்சலும் குணமாகிக்கொண்டு வந்தது. மூன்றாம் நாள் காலை ஒன்பது மணி இருக்கும். வழக்கமாக வாரத்திற்கு ஒரு முறை ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் பெரிய ஜெட்விமானம் அந்த ஊரின்மேல் பறந்து சென்றது.

திடீரென்று சுப்புவின் டெலிபோனில் கர்முர் என்று ஒரு வினோதமான சத்தம் கேட்டது.

“மணி, நீ பேசினாயா?” என்று அவன் கேட்டான். “இல்லையே” என்று மணி பதில் சொன்னான்.

“மணி, இங்கு வா. என் டெலிபோனில் வேறு ஏதோ நாட்டிலிருந்து, நமக்குத் தெரியாத ஏதோ மொழியில் பேசுகிறார்கள்” என்று உரக்கக் கத்தினான் சுப்பு. அவனுக்கு ஏற்பட்ட குதூகலத்திற்கு அளவே இல்லை.

மணி ஆவலோடு தன் கட்டிலை விட்டு வந்து, காதை டெலிபோனில் வைத்துக் கேட்டான். "ஆமாம், ஏதோ சத்தம் கேட்கிறது" என்றான் மணி. சுப்பு மறுபடியும் காதுகொடுத்துக் கேட்டான்.

"ஆமாம்! இவர்கள் செவ்வாய்க் கிரகத்திலிருந்து தான் பேசுகிறார்கள். என்றான் சுப்பு. எனக்கு நன்றாகக் கேட்கிறது" அந்தக் காலத்தில் பறக்கும் தட்டுகள் பூமிக்கு வருவதாகச் செய்தித்தாளில் பல அதிசயமான செய்திகள் வெளிவந்துகொண்டிருந்தன. பெரியவர்கள் அவற்றைப்பற்றியெல்லாம் பேசியதை அவர்கள் தடவை கேட்டிருக்கிறார்கள்.

"அதெப்படி செவ்வாய்க் கிரகம் ஆகும்?" என்று மணி சந்தேகத்தோடு கேட்டான்.

"ஆமாம், அது செவ்வாய்க் கிரகமேதான்; எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் சொல்லுவது நமக்குப் புரியவில்லை. அதிலிருந்தே அவர்கள் செவ்வாய்க் கிரகத்திலிருந்து பேசுகிறார்கள் என்று கண்டுகொள்ளலாம்" என்றான் சுப்பு.

மணிக்கும் அண்ணன் சொன்னது சரியென்று பட்டது. "ஆமாம், ஆமாம்! நீ சொன்னது சரி" என்றான் அவன். இருவருக்கும் ஒரே உற்சாகம் வந்து விட்டது.

இருவரும் மாறிமாறி டெலிபோனைக் காதில் வைத்துக் கேட்டார்கள்.

அந்தச் சமயத்தில் ‘படபட’ என்றும் ‘தடதட’ என்றும் பலவாறு சத்தம் கேட்டது. வெளியிலே ஆகாயவிமானம் வானத்திலே பறந்து சென்றது. ஆனால், அதை அவர்கள் கவனிக்கவில்லை. செவ்வாய்க் கிரகமே அவர்கள் கவனத்தில் இருந்தது.

‘படபட’, ‘தடதட” என்று சத்தம் கேட்கவே சுப்பு “ஓகோ, எனக்குத் தெரிந்துவிட்டது. செவ்வாய்க் கிரகத்திலிருந்து அவர்கள் நம் ஊர்மேல் படையெடுத்து வருகிறார்கள்” என்று அவன் புதிய உண்மையைக் கண்டுபிடித்தவன்போலக் கத்தினான்.

மணியும் அதை ஆமோதித்தான். “நம் ஊருக்கு முதலில் இதைத் தெரியப்படுத்த வேணும்” என்று இரண்டுபேரும் நினைத்தார்கள். ஆனால் எப்படித்தெரியப்படுத்துவது?

சுப்பு ஒரு தந்திரம் செய்தான். உடனே தன் நோட்டுப்புத்தகத்தில் இருந்த வெள்ளைக் காகிதங்களைப் பிரித்தெடுத்து, சிறுசிறு துண்டுகள் செய்து, அவற்றில் “செவ்வாய்ப் படையெடுப்பு வருகிறது, உஷார்!” என்று இருவரும் அவசரம் அவசரமாக எழுதிக் கீழே போட்டார்கள்.

காற்றில் மிதந்துவந்து கீழே விழுந்த அந்தக் காகிதத் துண்டுகளை அங்கு விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு ஓடின. “காற்றில் பறந்து இந்தக் காகிதங்கள் வந்தன” என்று குழந்தைகள் தாய்தந்தை முதலியவர்களுக்குச் சொன்னார்கள்.

இதனால் செய்தி ஊரெல்லாம் வேகமாகப் பரவி விட்டது. அந்த ஊர்மக்களும் இதை உண்மை என்றே நம்பினார்கள். "இல்லாவிட்டால் காற்றிலே எப்படி இந்தக் காகிதங்கள் பறந்து வரமுடியும்?" என்று அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். காற்றிலே பறந்து வந்ததால், யாரோ நம்மை எச்சரிக்கை செய்யவே ஆகாயத்திலிருந்து வீசியிருக்கிறார்கள் என்று அவர்கள் நம்பினார்கள்.

அந்த ஊருக்குப் பக்கத்திலே ஒரு பெரிய மலை இருந்தது. அதன் அடிவாரத்திலே பெரிய பெரிய குகைகள் இருந்தன. அவற்றிலே 'மலசர்' என்று சொல்லப்படும். ஏழைமக்கள் வாழ்ந்துவந்தார்கள்.

மலசரையெல்லாம் அந்த ஊர்மக்கள் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருந்தார்கள்.

ஆனால், இப்பொழுது அந்த மலசர் வாழும் குகைகளே தங்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கும் என்று எல்லாரும் குழந்தைகுட்டிகளோடு அங்கே ஓடினார்கள்.

மலசர்களும், "சாமி, நீங்கள் எல்லாம் குகைக்குள் இருந்துகொள்ளுங்கள். நாங்கள் யார் வந்தாலும் அவர்களை ஒரு ஒரு கை பார்த்துவிடுகிறோம்" என்று குகையில் அந்த ஊரார் இருப்பதற்கு அன்போடு இடம் கொடுத்தார்கள். அத்துடன், ஒவ்வொருவரும் ஒரு பெரிய தடியைக் கையில் வைத்துக்கொண்டு, குகைகளுக்கு முன்னால் காவலாக நின்றார்கள்.

அவர்களுடைய அன்பைக் கண்டு அந்த ஊரார் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் குகைகளிலேயே அவர்கள் சமைத்த உணவை உண்டு, கொடுத்த தண்ணீரையும் அருந்தினார்கள்.

“உயிர் போகிற நிலையில் தீண்டத்தகாதவர் என்று பார்த்தால் முடியுமா? அவர்களும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள்” என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

அடுத்த நாள் மாலைவரை அவர்கள் எல்லாரும் குகைகளிலேயே தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

சுப்புவுக்கும் மணிக்கும் இதற்குள் சளிக்காய்ச்சல் முற்றிலும் குணமாகிவிட்டது.

டெலிபோனில் சத்தமும் நின்றுவிட்டது. ஏனென்றால், மேலே ஆகாயவிமானம் பறந்தால்தானே ‘கர்முர்’ என்று சத்தம் கேட்கும்! இதை அவர்கள் ஓடிப்போய் ஊராருக்குச் சொன்னார்கள். “நாம் எச்சரிக்கையாக இருப்பதைப் பார்த்து அந்தச் செவ்வாய்க் கிரகமக்கள் படையெடுத்து வராமல் நின்றுவிட்டார்கள்” என்று அவர்கள் சொன்னார்கள். எல்லாருக்கும் ஒரே மகிழ்ச்சி.

“சாமி, நம்ம ஊரில் என்னை தங்கமா விளையுது? கம்பையும் சோளத்தையும் நம்பி நாம் வாழ்கிறோம். நம்ம ஊர்மேல் யார் படையெடுப்பார்கள்?” என்று மலசர்களின் தலைவன் சொன்னான்.

“இல்லை, உங்களுக்கு ஒன்றும் தெரியாது. உங்களில் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. நாங்கள் அப்படி இல்லை. பத்திரிகைகளில் வருவதையெல்லாம் படித்திருக்கிறோம்” என்று அந்த ஊர் மக்கள் பலர் சொன்னார்கள்.

மலசருக்கு ஒன்றும் தெரியாது என்று அவர்கள் நினைத்தாலும், அவர்களுடைய அன்பைக் கண்டு அவர்களைப் பாராட்டினார்கள். அவர்களைத் தாழ்வாக மதிக்கும் எண்ணமும் மாறத் தொடங்கிற்று.

சுப்பு, மணி – இவர்களுடைய டெலிபோன் விளையாட்டு இதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

----------



## 8. முத்துவின் முதல் திருட்டு

**மு**த்து என்று ஒரு பையன் இருந்தான். அவன் தங்கையின் பெயர் கமலம். இரண்டு பேரும் ஒரு நாள் பள்ளிக்கூடம் செல்லும்போது, ஒரு தோட்டத்திலே ஒரு மரத்தில் மாம்பழம் நிறைய இருப்பதைப் பார்த்தார்கள். அந்தத் தோட்டம் ஒரு வயதான அம்மாளுக்குச் சொந்தம். பழங்களைக்கண்டு அவற்றில் சிலவற்றைப் பறித்துக்கொள்ள வேண்டும் என்று முத்துவுக்கு ஆசை.

“வேறொருவர் தோட்டத்தில் இருந்து பழங்களைத் திருடுவது பாவமல்லவா? அம்மாவுக்குத் தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவார்கள்” என்றாள் கமலம்.

“அம்மாவுக்கு எப்படித் தெரியப்போகிறது? நாளைக்கு விடுமுறை. நீயும் கூடவா. என் சொல்லைத் தட்டினால் உன்னை அடிப்பேன்” என்றான் முத்து. அவன் சொல்லைத் தட்டினால் அடிப்பான் என்று பயந்தாள் கமலம். அவன் சொன்னபடியே மறுநாள் காலையில் இரண்டு பேரும் புறப்பட்டார்கள். கமலம் அப்பொழுதுகூடத் தடுத்துப் பார்த்தாள். முத்து விடாப்பிடியாக அவளை இழுத்துக்கொண்டு போனான்.

தோட்டத்தின் வாயில் கதவிலே “நாய் ஜாக்கிரதை” என்று எழுதப்பட்டிருந்தது.

“உள்ளே போனால் நாய் கடித்துவிடும்” அங்கேயே உட்கார்ந்துவிட்டாள் கமலம். முத்து உள்ளே கதவுக் கம்பிகளுக்கிடையே. உற்றுப் பார்த்தான். நாயொன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை. “நாயும் இல்லை, ஒன்றும் இல்லை. இதெல்லாம் எல்லோரையும் பயப்படுத்தி ஏமாற்ற அப்படி எழுதியிருக்கிறது” என்றான் முத்து. “இது திருட்டு அல்லவா? திருடுவது பாவம்” என்று மறுபடியும் கமலம் சொன்னாள்.

“நீ வேண்டுமானால் இங்கேயே இரு. நான் உள்ளே புகுந்து பை நிறையப் பழம் பறித்து வருகிறேன்” என்று சொல்லிவிட்டு, முத்து கதவில் ஏறி, உள்ளே குதித்து மரத்தில் ஏறினான். பை நிறையப் பழங்களைப் பறித்துக் கொண்டான். கீழே இறங்கும்போது உறுமிக்கொண்டு ஒரு நாய் அங்கு வந்தது.

முத்து பயந்துபோய் ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு வெளியே தாவ முயன்றான். ஆனால், அந்த முயற்சி பலிக்கவில்லை. வெளியே தாவ முடியாமல் அந்தத் தோட்டத்து வேலி மேலேயே 'பொத்' சென்று விழுந்தான். வேலிமுள் அவன் உடம்பெல்லாம் தைத்துவிட்டது. வேகமாக வெளியேற முயன்றதால் வேலியில் உள்ள முள்பட்டுச் சட்டையும் கிழிந்து போயிற்று. பழப்பையையும் எடுத்து வர முடியவில்லை. அது தோட்டத்திற்குள்ளேயே விழுந்துவிட்டது.

அவன் உடம்பில் தைத்திருந்த முள்ளை எல்லாம் மெதுவாக ஒவ்வொன்றாகக் கமலம் எடுத்துவிட்டாள். அந்தக் காயங்களிலிருந்து ரத்தம் வடியும்போதெல்லாம் அவளுக்குக் கண்ணீர் வந்தது.

"அம்மாவுக்குத் தெரிந்தால் ரொம்பவும் வருத்தப்படுவார்கள்" என்று சொல்லிக்கொண்டே அவள் தேம்பினாள்.

"இருட்டானபிறகு அம்மாவுக்குத் தெரியாமல் வீட்டுக்குப் போவோம்" என்று முத்து தலை குனிந்தபடியே சொன்னான். கமலத்தைப் பார்க்கவும் அவனுக்கு அவமானமாக இருந்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது. ஆனால், வெளிச்சமாக இருக்கும்போது வீட்டுக்குப் போக அவர்களுக்குத் தைரியம் வரவில்லை. முத்துவுக்குப் பசியோடு சேர்ந்து உடம்பெல்லாம் வலி எடுத்தது.

இருட்டான பிறகு அவர்கள் வீட்டை அடைந்தார்கள். "எங்கே போயிருந்தீர்கள்? காலையில் போனவர்கள் சாப்பிடக்கூட வரவில்லையே!" என்று அம்மா கேட்டாள்.

கமலம் முத்துவின் முகத்தைப் பார்த்தாள். அவன் ‘திருதிரு’வென்று விழித்துக்கொண்டு பதில் எதுவும் சொல்லத் தெரியாமல் நின்றுகொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் தோட்டத்துக்குச் சொந்தக்காரியான கிழவி அங்கே வந்தாள். அவளைக் கண்டதும் இருவரும் அஞ்சி நடுங்கினார்கள்.

“முத்து, எங்கே போனாய்? உன்னைக் காலையிலிருந்து மாம்பழம் பறிக்கத் தேடினேன். நீங்கள் காணப்படாமையால் வேறு இரண்டு சிறுவர்களைக் கூப்பிட்டு மாம்பழம் பறிக்கச் சொன்னேன். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பதினைந்து பழம் கூலியாகக் கொடுத்தேன். நீங்கள் வீட்டில் இருந்திருந்தால் உங்களுக்குக் கிடைத்திருக்கும்” என்றாள் அந்தப் பாட்டி.

முத்து தலைகுனிந்து நின்றான்.

“உங்களுக்கும் ஆளுக்கொரு பழம் கொண்டுவந்திருக்கிறேன்” என்று பாட்டி அன்போடு சொன்னாள்.

அந்தப் பாட்டி, வந்ததால் தாயார் அவர்களை மறுபடியும் விசாரிக்கவில்லை. ஆனால் முத்து அந்த மாம்பழத்தைத் தொடவே இல்லை.




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com